REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆனி 11உ சனி (25—6—55) ★ ★ வெளியூர்: ஆனி 12உ ஞாயிறு (26—6—55) [இதழ் 10

இரயில் நிறுத்தப் போராட்டம் 15-7-53! தண்டிக்கப்பட்டதோ 22-6-55!

கடந்த 1953 ஜூலை 15-ம் நாளன்று நடைபெற்ற இரயில் நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட 28 தோழர்கள் மீது, வாலாஜா கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டு இரண்டாண்டு காலம் வாய்தா போடப்பட்டு, பின்னர் வேலூர் சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டிற்கு மாற்றப்பட்டு அங்கு நான்கு வாய்தாக்களுக்குப்பின் மீண்டும் 22—6—55-ல் விசாரிக்கப்பட்டு அந்த 28 தோழர்களுக்கும் அன்று கோர்ட் கலையும்வரை தண்டனை விதிக்கப்பட்டு, மாலை 5 மணிக்கு விடுதலை செய்யப்பட்டனர்.

சௌராட்டிரத்திற்கு அடிக்கிறது யோகம்!

ரூ. 5-கோடி மூலதனத்தில் ஒரு சோடா ஆஷ் தொழிற்சாலை!

பிர்லாவின் புதிய இலாப வேட்டை!

சௌராஷ்டிரத்தில்உள்ள போர்பந்தர் பகுதியில் ஒரு சோடா ஆஷ் தொழிற்சாலை துவங்கப்பட இருக்கிறது. அதற்கான ஆரம்ப வேலைகள் ஏற்கனவே முடிக்கப்பட்டுவிட்டன.

ஜியாஜ்ராவ் பஞ்சாலையின் சார்பில், அதன் மானேஜிங் ஏஜெண்டாக இருந்துவரும் ஜி. டி. பிர்லா, இந்தத் தொழிற்சாலையைத் துவங்க இருக்கிறார்.

மேற்படி தொழிற்சாலைக்கு முதலீடு செய்யப்படவேண்டிய மூலதனம் ரூ. 4.63 கோடி எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஒரு கோடி ரூபாய்க்கு, குறிப்பிட்ட கால கெடுவிற்குப் பிறகு திரும்பப் பெற்றுக்கொள்ளக்கூடிய பங்குகள் பொதுமக்களுக்கு விற்கப்படும் எனவும் தெரிகிறது.

தொழிற்சாலையைத் துவங்குவதற்கும், சோடா ஆஷ் உற்பத்தி செய்வதற்தும், பொதுமக்களிடமிருந்து பங்குகளைப் பெறுவதற்கும், இந்தியப் பேரரசின் அனுமதி, தொழிலதிபர் பிர்லாவுக்குக் கிடைத்துவிட்டது.

சோடா ஆஷ் உற்பத்தி செய்யப்படுவதற்குத் தேவைப்படும் மூலப் பொருட்களான சுண்ணாம்புக் கல்லும், உப்பும் போர்பந்தர் பகுதியில் ஏராளமாகக் கிடைக்கின்றனவாம். உற்பத்தி செய்யப்பட்ட பொருளை, அதை உபயோகப்படுத்தும் இடங்களுக்குக் கொண்டுசெல்ல, போக்குவரத்து வசதியும் அங்கு ஏற்கனவே இருக்கிறதாம்!

இன்றுமுதல் 18 திங்களுக்குப் பிறகு சோடா ஆஷ் உற்பத்தியை அத்தொழிற்சாலை துவங்கக்கூடும் என முடிவு கட்டப்பட்டிருக்கிறது.

ஆரம்பத்தில் நாள் ஒன்றுக்கு 100 டன் வீதம் உற்பத்தி செய்யப்படும் சோடா ஆஷ், மெள்ள மெள்ள 200 டன் உற்பத்தி செய்யும் அளவிற்கு உயர்த்தப்படுவதற்கான வசதியில் இயந்திரம் அமைக்கப்படுகிறது.

தொழிற்சாலைக்குத் தேவைப்படும் இயந்திரக் கருவிகளுக்கு மட்டும் ரூ. 3 கோடிவரை செலவாகும் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

சோடா ஆஷ் தொழில் வளர்ச்சிக்கு மேலும் இடமிருக்கிறது எனவும் யூகிக்கப்படுகிறது.

1953—54-ல் 41,000 டன்வரையில் சோடா ஆஷ் உற்பத்தியானதாகவும், வெளி நாடுகளிலிருந்து 57,000 டன்வரை இறக்குமதி செய்யப்பட்டிருப்பதாகவும் அரசாங்க புள்ளி விவரம் கூறுகிறது. முதல் ஐந்தாண்டு திட்ட கால முடிவில் சோடா ஆஷ் உபயோகிப்பது 1·55 லட்சம் டன்னாக இருக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, மேற்படி பொருளில் உற்பத்தியைப் பெருக்குவதற்கு இன்னும் இடமிருக்கிறதாம்!

சௌராட்டிரத்தில் சர்க்கரை ஆலை ஒன்று துவங்கவும் ஏற்பாடாகி இருக்கிறது.

செயற்கை உரத் தொழிற்சாலை ஒன்றைத் துவங்க வேண்டுவதற்கான கோரிக்கையையும் சௌராட்டிர அரசாங்கம், இந்தியப் பேரரசிற்கு ஏற்கனவே கொடுத்திருக்கிறது.

மாலடோவின் திட்டம் நிராகரிப்பு

'ஐ. நா. சாசனத்தை மதித்து நடந்தாலே போதுமாம்'

டல்லஸ் கொக்கரிக்கிறார்!

சோவியத் வெளிவிவகார இலாகா மந்திரி மாலடோவ் கெடுபிடிப் போரை நிறுத்துவதற்காக ஐ. நா. சபைக் கூட்டத்தில் வெளியிட்ட ஏழு அம்சத் திட்டத்தை நிராகரித்துவிட்டு, அமெரிக்க வெளிநாட்டு மந்திரி டல்லஸ், "ஐ நா. சாசனத்தை மதித்து நடந்துகொண்டாலே போதுமானது," என்று பேசியிருக்கிறார்.

இராதாகிருஷ்ணன்—விஜயலட்சுமி மீது ஒழுங்கு நடவடிக்கை!

ம.சோ. கட்சியின் தமிழ்நாடு கிளையிலும் பிளவு

சென்னை, ஜூன் 23—

சென்னை நகர ம. சோ. கட்சியினின்றும், தோழர் வி. ஆர். இராதாகிருஷ்ணன், தோழியர் விஜயலட்சுமி ஆகியோரை உறுப்பினர் பதவியினின்றும் விலக்கிவைப்பதென, நகர நிர்வாகக் குழு முடிவெடுத்திருப்பதாகவும், அவர்களிருவரும், கட்சிக்குப் புறம்பாக காங்கிரஸ் கட்சியுடன் சேர்ந்து செயல்படுவதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டனர் எனத் தெரிகிறது.

மேலும், கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உத்தர பிரதேச மாநிலக் குழுவின் மீது மேற்கொண்டிருக்கிற நடவடிக்கையைக் கண்டித்தும், மீண்டும் அந்த பிரச்சினை குறித்து பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் கோரி, தமிழ்நாடு ம சோ. கட்சி கோரியுள்ளதாகத் தெரிகிறது.

வெளியேற்றியது சட்ட விரோதமாம்!

காஞ்சீபுரம், ஜூன் 23—

தோழர் வி. ஆர். இராதாகிருஷ்ணனையும், தோழியர் விஜயலட்சுமியையும், கட்சியினின்றும் வெளியேற்றியது அதிகாரபூர்வமற்றது என்றும், சட்ட விரோதமானது என்றும் தமிழ் நாடு ம. சோ. கட்சி மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் என். ஒ ரஹீம் குறிப்பிட்டிருக்கிறார்.

★

டாக்டர் லோகியா

ம. சோ. கட்சியில் இருக்கத் தகுதியற்றவராம்!

சென்னை, ஜூன் 23—

காஞ்சீபுரத்தில் நடைபெறவிருக்கும் தமிழ் நாடு ம. சோ. கட்சி மாநாட்டில் கலந்துகொள்ள டாக்டர் லோகியா, பி. வி. ஜி. ராஜு ஆகியோருக்கு அனுப்பப்பட்டிருந்த அழைப்பை ம. சோ. தலைவர் பி என். சின்னதுரை ரத்து செய்திருப்பதை அங்கீகரித்து, ஆச்சாரியா நரேந்திர தேவ் ஒரு தந்தி அனுப்பியிருக்கிறாராம்.

அவ்விருவரும் பகிரங்கமாக — ஒழுங்கற்ற முறையில் நடந்துகொண்டிருப்பதால் அவர்கள் ம. சோ. கட்சியில் இருக்கத் தகுதியற்றவர்கள் என்று நரேந்திரதேவ் தெரிவித்திருக்கிறாராம்.

உழுபவர்களுக்கு நிலத்தில் உரிமை

நிலச் சீர்திருத்தம் பற்றி காமராசர் தகவல்

செய்யாவிட்டால் பதவி வகிக்கமாட்டாராம்!

திருச்சி, ஜூன் 24—

"சர்க்கார் கொண்டுவரவிருக்கும் நிலச் சீர்திருத்தத்தில், சாகுபடி உரிமைப் பாதுகாப்பு, நியாய குத்தகை நிபந்தனைகள் நிர்ணயம் முதலியன மட்டுமின்றி, உழுபவர்களுக்கு நிலத்தில் சொத்துரிமை அளிக்கும் அம்சமும் அடங்கியிருக்கும்,"

—என்று, முதன் மந்திரி காமராசர், லால்குடி விவசாயிகள் மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சர்க்கார் இந்த அம்சம் குறித்து தீவிரமாகப் பரிசீலித்து வருவதாயும், இதைக்கூட தம்மால் செய்ய முடியாமற்போனால், தாம் முதன் மந்திரியாயிருக்க முடியாது என்றும் காமராசர் தெரிவித்திருக்கிறார்.

மகசூல்களை அடமானம் வைத்து

கடன் பெற வசதி

விவசாயிகளின் மகசூல்களை அடமானமாக வைத்துக்கொண்டு அதன்மீது கடன் கொடுக்கலாமென, சென்னைசர்க்கார் நியமித்துள்ள விவசாயப் பண்டங்கள் விலை பரிசீலனைக் குழு சிபாரிசு செய்திருப்பதாகத் தெரிகிறது.

இரு எஜமானர்களையும் திருப்தி செய்ய எண்ணுகிறாரா?

மிராசுதார்கள், குடியானவர்களுக்கு காமராசர் 'அறிவுரை!'

திருச்சி, ஜூன் 24—

"திருச்சி மாவட்டத்தில் சில மிராசுதார்கள் குடியானவர்களை வெளியேற்றி வருவதாகக் கூறப்படுகிறது. திட்டமிடப்பட்டுள்ள நிலச் சீர்திருத்தங்கள் குறித்து அவர்கள் அச்சப்படுகிறார்கள் போலும்!

"நாட்டு நன்மை கருதி அரசாங்கம் சீர்திருத்தங்களைச் செய்யும் போது, மிராசுதார்கள் குழப்பம், விளைவிக்கும் வகையில் நடந்துகொள்வது வருந்தத்தக்கது!

"சீர்திருத்தங்களை முன்தேதியிலிருந்து அமுலுக்குக் கொண்டுவருவதின் மூலம் மிராசுதார்களின் முயற்சிகளை முறியடிக்க சர்க்காரால் சுலபத்தில் முடியும் என்பதை அவர்கள் உணர வேண்டும்; பின், விவசாயிகளிடம் கசப்பை ஏற்படுத்திக் கொண்டதுதான் அவர்களுக்கு மிச்சமாக இருக்கும்.

"அதைப் போன்றே விவசாயிகளும் தவறான பிரசாரத்திற்குச் செவி சாய்த்து, சட்டவிரோதமான நடவடிக்கைகளிலும், உற்பத்தியைப் பாதிக்கும் மற்ற நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது; இவற்றை சர்க்கார் அனுமதிக்க முடியாதென்பதை உணர்ந்து சரியான வழியில் விவசாயிகள் நடந்துகொள்ள வேண்டும்."

இவ்வாறு, லால்குடியில் நடைபெற்ற அரசியல் மாநாட்டினைத் துவக்கி வைத்துப் பேசுகையில் முதன் மந்திரி காமராசர் கருத்துத் தெரிவித்திருக்கிறார் எனத் தெரிகிறது.

துங்கபத்திரா பாசனம்

10,000 ஏகர் நிலம் சாகுபடி செய்யப்படுகிறது

சென்னை, ஜூன் 24—

துங்கபத்திரா கீழ் கால்வாய் பாசனத்தின்படி சுமார் 10,000 ஏகர் நிலம் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

தகவல் தந்த ஆந்திர சர்க்கார் அதிகாரி ஒருவர், வரும் அக்டோபர் மாதத்தில் மேலும் சுமார் 30,000 ஏகர் சாகுபடிக்குவரும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

துங்கபத்திரா பாசனத்தைக் கொண்டு 75,000 ஏகர் சாகுபடி செய்யவேண்டுமென்பது லட்சிய எல்லையாம்.

இலங்கை தலைமை நீதி மன்றம் அதிகாரி தலையில் குட்டுகிறது!

தமிழர் குடி உரிமை மனு அப்பீலில் வெற்றி

கொழும்பு, ஜூன் 23—

இலங்கை குடிஉரிமைப் பதிவு துணைக் 'கமிஷனர்' தனது மனுவை நிராகரித்ததை எதிர்த்து, வி. பரமசிவன் என்ற தமிழர் செய்திருந்த 'அப்பீலை' இலங்கை தலைமை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு, அவரை இலங்கைக் குடிமகனாகப் பதிவுசெய்து கொள்ளுமாறு துணைக் கமிஷனருக்கு உத்தரவிட்டிருக்கிறது.

உணவுக் கலப்படம்-தடுக்க அவசரச்சட்டம்

அவசியமில்லையென அறிவிப்பு

உணவுக் கலப்படத்தைத் தடுப்பதற்காக இப்போதைய மாநிலச் சட்டங்களை நீடிக்க அவசரச் சட்டம் பிறப்பிப்பது அவசியமில்லை என்று மத்திய சர்க்கார், மாநில சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறதாம்.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 25—6—'55 சனி

அரும்பெருஞ் செயல்!

ஆங்கில ஆட்சியில் புகுத்தி செயலாற்றப்பட்டு வரும் தொடக்க, இடைநிலை, உயர்நிலை, கல்லூரி நிலைப் படிப்புகளை குற்றம் கூறுவோரும், கண்டித்துப் பேசுவோரும், திருத்தங் கூறுவோரும் தினம் தினம் எண்ணிக்கையில் கூடிவருகின்றனர். அவர்களில் கல்வி நிபுணர்கள் எனப்படுவோரும் உண்டு; அரிச்சுவடி அறியாதோரும் உண்டு.

செயல்முறையில் இருந்து வரும் கல்வியால் நாடு கீழ்நிலைக்குப்போய்விட்டது எனக்குறைபடுவோரும், பெரும்பாலான மக்களிடை நாத்திகம் பரவிவிட்டது எனப் பதைபதைப்போரும் இருக்கின்றனர். நிரம்பப் பேர் குறைகூறுகிறார்களே, நாமும்தான் ஏதாவது குற்றம் கூறி வைப்போம் எனக்கொண்டு, தற்காலக் கல்வி ஏற்பாட்டைக் கண்டித்துக் கூறுவதின் மூலம், தங்களையும் ஏதோ கற்றிருப்பவர் எனப் பிறர் நம்பும்படிச் செய்துவரும் பெரிய மனிதர்களும் இருந்து வருகின்றனர்.

இன்றுள்ள கல்வி முறைக்குப் பதிலாக, காலத்திற்கேற்ற கல்வி ஏற்பாட்டைத் திருத்தி அமைக்கப் போவதாகக் கூறிக்கொண்டு, ஆச்சாரியார் போன்று கல்லாமை ஏற்பாட்டைப்புகுத்தி, குழந்தைகள்கல்வி பெறுவதைக் குட்டிச்சுவராக அடிக்கத் துணிபவர்களின் தொகையும் ஏராளம். கல்வித்துறைக்கு, அதிகாரப்பற்றற்றோர் கூறும் கருத்துக்களால் ஏற்படக்கூடிய கேடுகளைக் காட்டிலும், ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் காங்கிரஸ் ஆளவந்தார்களால் ஏற்பட்டுவரும் தீமைகளுக்கு ஒரு எல்லையே கிடையாது.

கல்வி நிலையங்களை, கல்வியின் மூல நோக்கத்திற்கு முரணாக, சிறுவர்-சிறுமியர் தொழில் நிலையங்களாக மாற்றிவிடுவதில், இந்தியப் பேரரசின் கல்வித்துறை தீவிரமாகத் துணிந்து நிற்கிறது. ஒரு தனி நபரின் சொந்தக் கோட்பாடாகக் கருவுற்ற ஆதாரக் கல்வி, இந்தியப் பேரரசின் ஆதிக்க பலத்துடன், இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலுமுள்ள சிறுவர்-சிறுமியர்களை, அறவே ஊதியம் பெறாது, பொருள் உற்பத்தி செய்யும் இளந்தொழிலாளர்களாக மாற்றப்போவதாக அச்சுறுத்தும் அளவிற்கு ஆதிக்கம் பெற்று விட்டிருக்கிறது.

நமது சிறுவர் சிறுமியர், பிற்கால வாலிப பருவத்தில் வெறும் பாட்டாளிகளாக மட்டும் விளங்கிவிட்டால் போதும், மூளை பலம் பெற்று ஆளும் திறம்படைத்தவர்களாகவும், உரவு கலந்து வாழக் கற்றவர்களாகவும் இல்லாமலிருந்தாலும் குற்றமில்லை, என்ற முடிவின் மீதுதான், ஆதாரக் கல்வி அரங்கேற்றத்தை அகில இந்திய ஆளவந்தார்கள் தொடங்கி இருக்கிறார்கள் போலும்!

நமது பள்ளிகளில் [illegible] தரப்பட்டுவரும் கல்வி நிலை குறித்து எவ்வளவுதான் குறை கூறப்பட்டபோதிலும், கண்டிக்கப்பட்டபோதிலும், பள்ளியில் சேர்ந்து படிக்க வரும் மாணவர்கள் தொகை குறைவது கிடையாது. அதற்கு மாறாக ஆண்டுக்கு ஆண்டு பள்ளிகளில் சேர்ந்து படிக்க விழையும் மாணவர்களின் எண்ணிக்கை, கட்டுக்கடங்காமல் பெருகிக்கொண்டே போகிறது. இந்த வளர்ச்சி வரவேற்கத் தகுந்ததேயாகும்.

கல்வி பெற விழையும் மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் பெருகிவரும் வேகத்திற்கொப்ப, பள்ளிகளின் எண்ணிக்கை பெருகிவரவில்லை. புதுப்புது பள்ளிகள் துவங்கப்பட்டுத்தான் வருகிறது என்றாலும், கூடிவரும் மாணவர்களின் எண்ணிக்கையை ஈடுசெய்யும் அளவில் பள்ளிகள் பெருகவில்லை என்றே கொள்ள வேண்டி இருக்கிறது.

பள்ளிப் பெருக்கம், மாணவர்களின் பெருக்கத்திற்கேற்பப் பெருகவில்லை; பல மடங்கு பின்தங்கிக் கிடக்கிறது. அதன் விளைவாகத்தான், பொதுவாக ஒவ்வொரு பள்ளியிலும், குறிப்பாக ஒவ்வொரு வகுப்பிலும், அதிகமான மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

ஒவ்வொரு வகுப்பிலும் அதிகப்படியான மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதின் காரணமாக, ஆசிரியர்களின் பொறுப்பும், சுமையும் அதிகரித்துவிடுகிறது. அதனால், குறிப்பிட்ட மாணவர்களைக் கண்காணித்துப் பயிற்றுவிப்பது போன்று, அதிகப்படியான மாணவர்களை அதே ஆசிரியர் கண்காணித்து வருவதும், பயிற்றுவிப்பதும், ஆசிரியரின் ஆற்றலுக்கு மீறிய ஒன்றாகிவிடுகிறது. அக்குறைபாட்டைக் களைந்தெறிய முயன்றாலும், அந்த ஆசிரியரால் முடிவதில்லை. ஆசிரியர் மட்டும் என்ன இயந்திரமா?

அதிகப்படியான மாணவர்களை ஒரு ஆசிரியரின் பொறுப்பில் ஒப்படைப்பதின் காரணமாக, மாணவர்களின் படிப்புத் தரமும், ஒழுங்கும் குன்றுவதற்கு ஏதுவாகிறது. இக்குன்றுதலின் காரணமாக, குறிப்பிட்ட அந்த ஆசிரியர், பெற்றோர்களின் தூற்றுதலுக்கு ஆளாக வேண்டிய நிலையும் கட்டாயமாகிறது.

உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள ஒவ்வொரு வகுப்பிலும், இதுவரை சேர்க்கப்பட்டுவந்த 40 மாணவர்களுக்கு பதிலாக, இவ்வாண்டில் 5 மாணவர்களைக் கூடுதலாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென, கல்வித்துறை ஆணையாளர் சென்னை அரசாங்கத்திற்கு அறிவுரை கூறியுள்ளார். அவ்வறிவுரையை ஏற்றுக்கொண்டு அரசாங்கமும், அதை நடைமுறைக்குக் கொண்டு வந்தும் இருக்கிறது.

கல்வித் துறைத் தலைவர், நமது ஆசிரியர்களின் ஆற்றலையும், மாணவர்களின் கல்வி ஆர்வத்தையும், பெற்றோர்களின் மனப்போக்கையும், நம்மைவிட நன்கு அறிந்திருப்பவர்.

தமது பிள்ளைகளையும் படிக்க வைக்க வேண்டும் என நமது மக்கள் எண்ணத் தொடங்கி இருப்பதோ பாராட்டுதற்குரிய அரும்பெருஞ் செயல். இந்த நிலையில் பள்ளியில் இடமில்லை எனக் கூறி, பள்ளியில் ஆர்வத்துடன் சேரவரும் மாணவர்களை வெளியேற்றிவிட்டு, பெற்றோர்களின் ஆசையை முறியச் செய்துவிடாமல், மேலும் கூடுதலான மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள அரசாங்கத்திற்கு அறிவுரை கூறிய, கல்வித்துறை ஆணையாளரை, நமது பெற்றோர்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

ஒரு ஆசிரியரிடம் கூடுதலான மாணவர்களை ஒப்படைப்பதால், கல்வியின் தரம் குறையவும், ஒழுங்கீனம் வளரவும் இடமாகின்றன எனும் கருத்து, ஒரு பொதுப் பிரச்சினையாகும். பள்ளிகளின் பெருக்கமும், ஆசிரியர்களின் பெருக்கமுந்தான், அப்பொதுப் பிரச்சினையை வெற்றிகரமாகத் தீர்த்து வைக்கும் பரிகாரங்களாகும்.

அப்பரிகாரங்களை பொழுது புலர்வதற்குள் உருவாக்கிவிட முடியாது. எதிர்காலக் கல்வி ஏற்பாடு குறித்து நிச்சயமற்றத் தன்மை இருந்துவரும் இந்த நிலையில், அப்பரிகாரங்களைப் பற்றி எண்ணுவதுகூட பொருத்தமானதாக இருக்காது.

காலப்போக்கிலும், பெரும் முயற்சியிலும் களையப்பட வேண்டிய அக்குறைபாட்டை, ஒரு புகலாகக் கொண்டு, பள்ளி நோக்கிக் கல்வி பெற வரும் மாணவர்களைத் திரும்ப விட்டிற்கு அனுப்பிவிடாமல், அம்மாணவர்களுக்கு அரியவாய்ப்பை அளித்தமைக்காக, கல்வித்துறை ஆணையாளரை, அம்மாணவர்களுடன் சேர்ந்து நாமும் பாராட்டுகிறோம்.

அந்நிய நாடுகளில்!

ரயில்வே பெட்டிகளுக்கு இந்தியா தந்துள்ள 'ஆர்டர்'கள்

இந்திய இரயில்வேக்களுக்கு 'வாகன்'கள் சப்ளை செய்யும் உத்தரவு, ஆக்ஸ்போர்டில் உள்ள ஒரு பெரும் தொழிற்சாலைக்குக் கிடைத்திருக்கிறதாம்.

சுமார் 25 லட்சம் பவுன் (ஸ்டர்லிங்) பெறுமான வாகன்கள் 'சப்ளை' செய்யப்படும் என்றும், உற்பத்தி இந்த ஆண்டு இறுதிக்குள் துவங்கும் என்றும், வாகன்கள் ஒன்றுசேர்க்கப்படுவது இந்தியாவிலேயே நடைபெறும் என்றும் கூறப்படுகிறது

★

ஜப்பானிருந்து 50 இரயில் பெட்டிகள்

இந்தியாவில் பெரிய நகரங்களுக்கும், சுற்றுப்புற ஊர்களுக்குமிடையில் விடப்படும் மின்சார இரயில்களில் உபயோகிக்கப்படும் 50 'பிராட்கேஜ்' பெட்டிகளை 'சப்ளை' செய்ய ஒரு ஜப்பானிய நிறுவனம், உத்தரவு பெற்றுள்ளதாம்.

இவற்றின் விலை கிட்டத்தட்ட ரூ. 2 கோடி ஆகலாம்.

★

போலந்திலிருந்து 2,500 சாமான் இரயில் பெட்டிகள்

இந்தியாவுக்கு போலந்து நாடு 2,500 சாமான்கள் ஏற்றிச் செல்லும ரயில் பெட்டிகளை 'சப்ளை' செய்யுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

'தி.மு. கழகத் தோழர்கள் தூதுவர்களாக வேண்டும்'

'ஊர்கள்தோறும் கிளைகள் முளைக்க வேண்டும்'

பொதுச்செயலாளர் விளக்கம்

"திராவிட முன்னேற்றக் கழகம் பிறரது கேலிக்கும் கிண்டலுக்குமிடையே வளர்ந்தது—வளர்ந்து வருகிறது; அத்தகைய கேலிக்கும், ஏளனத்திற்குமிடையே நாட்டுக்கு நல்லவை பயக்கும் கருத்துக்களைக் கொண்டு மக்களிடையே பணியாற்றி வருகிறது; இந்த நாட்டின் இளம் இதயங்களை எல்லாம் எஃகுக் கம்பிகளாக மாற்றுகிறது.

"கொள்கைகளைக் கட்டிக் காத்துவரும் தோழர்கள் நமது கழகத்தில் நிறைந்திருப்பதால்தான் நாம்—நமது கழகம், பிறரது எதிர்ப்புகளுக்கெல்லாம் வளைந்து கொடுக்காமல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறோம்; வளர்ந்துகொண்டு வரும் நாம், இந்த நாட்டை—திராவிட நாட்டை மீட்கப் பாடுபடுகிறோம்; திராவிட மக்கள் வயிறார உண்டு வாழவும், இருக்க இருப்பிடமும், உடுக்க உடையும் குறைவில்லாமல் கிடைப்பதற்குமான வாழ்க்கை வசதிகள் பெற முயன்று வருகிறோம்;

"இந்த நாட்டு மக்களை—திராவிட இனமக்களை ஒன்றுபடுத்தும் பெரும்பணியில் ஈடுபட ஆயிரமாயிரம் இளைஞர்கள் முன்வரவேண்டும்; நமது கழகத் தோழர்கள், இந்த நாட்டு மக்களுக்குக் கல்வியையும், நமது கொள்கைகளையும் பரப்ப முன்வரவேண்டும்; இந்த நாட்டிலே உள்ள கற்றவர்கள் 100-க்கு 16 பேர்தான்; அதிலும் கல்லூரிப் படிப்பு பயின்று பட்டம் பெற்றோரோ 0 12 சதவிகிதத்தினரேதான்—அதாவது பட்டம் பெற்றோர் தொகை 10,000-க்கு 12 பேர்களேயாவர்; இந்த நிலைமையை மாற்றி அமைக்கும் பணியில் நாம் மும்முரமாக ஈடுபட்டு இருக்கிறோம்;

"இவைகள் மட்டுமல்ல—சுதந்திர சோஷலிசக் கூட்டாட்சியை மலரச் செய்யவேண்டிய மகத்தான பணியில் கடமையாற்றிக் கொண்டிருப்பவர்களும் நாம்தான்; 'சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி' என்ற அடிப்படைக் கொள்கையைக் கொண்டவர்கள், நாம்; நாட்டில் மலிந்துள்ள கேடுபாடுகளை ஒழித்து, நாட்டைச் சீர்திருத்தி, அங்கே நல்லாட்சி மலரச் செய்யவேண்டிய பெரும் பணியில் ஈடுபட்டு உழைக்கவேண்டியவர்களும் நாம்தான்; நாம், அறிவாற்றல் மிக்கப் படையினரை உருவாக்கி, வளர்த்து வருகிறோம்; பெரியதோர் நாட்டை—நமது சொந்த நாட்டை—நாம் வாழ்வதற்குரிய நாட்டை அன்னியரின் கைப்பிடியிலின்றும் மீட்க ஆசைப்படுகிறோம்;

"எனவே, நமது கழகத் தோழர்கள், 'தூதுவர்'களாக மாறி, நமது கருத்துக்களை மாற்றாரும் நன்குணர்ந்து கொள்ளும்படி விளக்கி, அதன் மூலம் நமது கொள்கைகள் நாட்டில் பரவ பணியாற்றவேண்டும்; நமது கருத்துக்கள் பொதுமக்கள் மனதிலே படும்படியாக தோழர்கள் ஆங்காங்கே கிளைக் கழகங்கள் அமைக்கவேண்டும்."

—இவ்வாறு 20—6—55 மாலை வேலாயுதம்பாளையத்தில் (புகளூர்) தமக்களிக்கப்பட்ட வரவேற்பு—மாநில மாநாட்டு நிதியளிப்புப் பொதுக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றுகையில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:—

"இப்போது தரப்பட்ட இந்த மாபெரும் வரவேற்பு, தி. மு. கழகப் பொதுச்செயலாளருக்குக் கொடுத்த வரவேற்பாகும்—பொதுச் செயலாளர் என்ற பதவிக்குக் கொடுத்த வரவேற்பாகும்.

"அண்ணா அவர்கள் எந்த ஒரு ஜனநாயகப் பண்பு மக்களிடையே மிளிரவேண்டும் என விரும்பினாரோ, அந்த ஜனநாயகப் பண்பு 'பொதுச் செயலாளர்' பதவியில்—அந்தப் பதவிக்குக் காட்டப்பட்ட வரவேற்பின் மூலம் நன்கு தெரிந்துவிட்டது.

"தி. மு. கழகப் பொதுச் செயலாளர் பதவி—என்ன—அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் தேபர் வகிக்கும் பதவியா?—அல்லது, அகில உலகப் புகழ் பெற்ற நேரு பண்டிதர் கொண்டுள்ள பதவியா? —அதுவுமில்லையென்றால் குடியரசுத் தலைவர் இராசேந்திரரின் பதவியா?—இதற்காகவா இவ்வளவு மாலைகள்—வரவேற்பு—பண முடிப்பு?"—என்று மாற்றுக் கட்சித் தோழர்கள் கருதலாம். மாற்றுக் கட்சி நண்பர்கள் 'மனச் சாந்தி' பெற வேண்டுமென்பதற்காகவே கூறுகிறேன்—'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்பதுபோல், கழகத் தோழர்கள் என்மீது—பொதுச் செயலாளர் பதவிமீது கொண்டுள்ள அன்பும் பாசமுமே இவற்றிற்கெல்லாம் காரணங்களாகும்.

"காங்கிரஸ்காரர்களின் தியாகத்தைக் குறைவாக மதிப்பிடுபவர்கள் நாமல்ல; லாலா லஜபதிராய், பண்டித மாளவியா, திலகர், கோகலே போன்ற பெரும் காங்கிரஸ் தலைவர்கள் காங்கிரசுக்காகச் செய்த தியாகங்களனைத்தும் ஒப்பிட முடியாத மதிப்புடையவை என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆனால்...? இன்றைய நமது காங்கிரஸ் தோழர்களோ வடநாட்டாருக்கு 'எடுபிடி' ஆட்களாகத் தானே இருக்கின்றனர்?

"நமது மாநில முதலமைச்சர் காமராசர் 12 ஆண்டு காலம் 'ஏக சக்கரவர்த்தி'யாகத் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் குழுத் தலைவராக இருந்தவர்—தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட சி. பி. சுப்பையாவைத் தோற்கடித்தவர்—'கல்கி'யின் பலமிக்கத் துணையுடன் நின்ற ஆச்சாரியாரையும் தோற்கடித்து, விரட்டியவர் — 'தொண்டராக இருந்து தலைவராக உயர்ந்தவர்' என்று புகழப்படுபவர்—கடந்த 12 ஆண்டுகட்கு முன்பும் சரி, இப்போதும் சரி—அவருக்கு வடநாட்டுப் பஞ்சாயத்துக்கள் ஏதாவதொன்று அவரை மதித்து வரவேற்புக் கொடுத்ததுண்டா? ஆனால், வடநாட்டுத் தலைவர்கள் எவர் வந்தாலும் வரவேற்புத்தர தென்னாடு தவறியதில்லையே? தென்னாட்டிலிருந்து செல்வோருக்கு வடநாட்டில் மதிப்பு இல்லை—அதே நேரத்தில் வடநாட்டிலிருந்து வருகிற ஒருவருக்குக்கூட தவறாமல்வரவேற்புத் தருகிறது தென்னாடு; இந்த முரண்பட்ட — இழிவான நிலை ஏன?

"தென்னாடு வடநாட்டுடன் இணைந்திருப்பதால், பொருளாதாரத் துறையிலாவது—ஒரு சிறிதளவு இலாபமாவது இருக்கிறதா? இங்கே குச்சிக கிழங்கை உற்பத்தி செய்து அதனை சேலத்தில் சவ்வரிசியாகச் செய்து வடநாட்டுடன் வியாபாரம் செய்யத் துவங்கிய

(4-ம் பக்கம் பார்க்க)

ஆதிக்கக் கரம் நீளுகிறது!

இந்தியாவுக்கு அமெரிக்க உதவி அதிகரிக்கிறது

அமெரிக்காவுக்கும்— இந்தியாவுக்கும் இடையே சமீபத்தில் ஒரு ஒப்பந்தம், புதுடில்லியில் கையொப்பமாகியிருக்கிறது. அதன்படி 38,145 டன் உருக்கிரும்பு இந்தியாவுக்குக் கிடைக்கும். இந்தியாவின் அபிவிருத்திக்காக அமெரிக்கா கொடுக்கும் நிதியினின்று இதற்கு 68,40,885 டாலர் செலவாகும்.

அன்றியும், 3 துணை ஒப்பந்தங்களின்படி இந்தியாவிற்கு அமெரிக்காவிடமிருந்து 5,22,700 டாலர் உதவி கிடைக்கும் என்று தெரிகிறது.

இந்த மூன்று துணை ஒப்பந்தங்களில் முதல் ஒப்பந்தப்படி கூட்டு சமூகநலக் கல்வித் திட்டத்திற்காக 2,79,000 டாலரும், இரண்டாவது திட்டப்படி கப்பல் போக்குவரத்தையும், உள்நாட்டு மீன்பிடி தொழிலையும் விரிவுபடுத்த 2,35,000 டாலரும், துணி நெய்தல் தொழில் சம்மந்தமான வெப்பதட்ப நிலை பற்றி ஆராய மூன்றுவது திட்டத்தின் மூலம் 300 டாலரும் கிடைக்குமாம்.

உள்நாட்டு மீன்பிடி தொழில், கப்பல் போக்குவரத்திற்காக கூட்டுத் திட்டத்தில் இந்திய சர்க்கார் ரூ. 11 லட்சம் வழங்குமாம். மேலும், பசிபிக் கடலில் மீன்பிடி முறைகளை ஆராய 4 இந்திய மீன் இலாகா விஞ்ஞானிகள் அமெரிக்கா செல்லவும் அத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளதாம்.

4-வது உடன்பாட்டின்படி, நிதி திரட்டல்களுக்கு இந்தியா கொடுக்கும் தொகை ரூ 71.25 லட்சத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

★

'டைப்ரைட்டிங்' மெஷின்கள் நன்கொடை

அமேரிக்கா அளிக்கிறது

இந்தியா உள்பட 26 நாடுகளைச் சேர்ந்த 500 நூல் நிலையங்கள், பள்ளிக்கூடங்கள், ஆராய்ச்சி நிலையங்களுக்கு அமெரிக்கா 1,244 'டைப்ரைட்டிங்' மெஷின்களை நன்கொடையாக அளிக்குமாம்.

அமெரிக்காவிலுள்ள ஒரு டைப்ரைட்டிங் கம்பெனி, இவைகளை ஐ. நா. கல்வி, விஞ்ஞான, கலாச்சார நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளதாகவும், அவை ஏற்கனவே பல்வேறு நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

அமெரிக்க உற்பத்தியும்—வருமானமும் உயர்வு?

அமெரிக்க உற்பத்தியும், வருமானமும் மிகவும் உயர்ந்த நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

1955-ம் ஆண்டின் முதல் மூன்று மாதத்தின் மொத்த உற்பத்தியின் மதிப்பு 37,000 கோடி டாலர்; வேலை செய்வோர் தொகை 6,51,92,000.

இந்தியா இறக்குமதி செய்த இயந்திர சாதனங்கள்

இந்த ஆண்டு ஜனவரி—ஏப்ரல் மாதங்களில் இந்தியாவிலிருந்து 6,68,71,000 பவுன் மதிப்புள்ள சரக்குகள் பிரிட்டனுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

பிரிட்டனிலிருந்து இந்தியாவுக்கு வந்த சரக்குகளின் மதிப்பு 4,38,56,000 பவுன்களாகும்.

பிரிட்டனிலிருந்து இந்தியா இறக்குமதி செய்தவற்றில் இயந்திர சாதனங்களே அதிகம். தொழிலுக்கும்—விவசாயத்திற்கும் பயன்படக்கூடிய இயந்திரங்களை 1,03,91,000 பவுனுக்கு இந்தியா கொள்முதல் செய்திருக்கிறது.

அணுவிலிருந்து மின்சாரம்!

5½ கோடி டாலர் செலவில் உற்பத்திசாலை நிறுவப்படும்!

350 ஏக்கர் நிலத்தில் அணுவிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான ஒரு நிலையத்தை அமைப்பதற்கு அணுசக்தி நிறுவனத்திடம், நியூயார்க்கிலுள்ள அமெரிக்கக் கம்பெனி ஒன்று அனுமதி கோரியுள்ளது.

5,50,00,000 டாலர் செலவில் அமைக்கப்படும் இந்த உற்பத்தி சாலை 1960-ல் தயாராகும்.

பல மாதங்களுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு அவசியமான அணுப் பொருட்கள் இந்த உற்பத்திச்சாலையிலுள்ள அணு உலையில் சேர்க்கப்படுமென்றும், அது பூமிக்கு அடியில் வேலை செய்யுமென்றும் கூறப்படுகிறது.

அணு மின்சார உற்பத்திசாலையில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு விபத்துக்கள் ஏற்படாமல் இருப்பதற்குத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை இக்கம்பெனி ஏற்படுத்துமாம்.

9 லட்சம் பவுன் மதிப்புள்ள மின்சார ரயில்வே தளவாடங்கள்

பிரிட்டனிடமிருந்து இந்தியா வாங்குகிறது

10 லட்சம் பவுன் விலையுள்ள மணல்வாரி கப்பலுக்கும் ஆர்டர்!

கல்கத்தா நகர்ப்புற மின்சார இரயில்வே அமைப்புக்காக சுமார் 9,00,000 பவுன் மதிப்புள்ள மின்சார இரயில்வே தளவாடங்களை பிரிட்டனிலிருந்து வரவழைக்க நிச்சயிக்கப்பட்டிருக்கிறதாம்.

சுமார் 10,00,000 பவுன் விலையுள்ள மணல்வாரிக் கப்பல் ஒன்றை பிரிட்டனிலிருந்து வாங்க கல்கத்தா துறைமுக அதிகாரிகள் நிச்சயித்திருக்கிறார்கள். இந்த 'ஆர்டரை'ப் பெற பிரிட்டன், ஐரோப்பிய, ஜப்பானிய நிறுவனங்கள் போட்டியிட்டன.

இந்தியாவுக்கு 'லேலண்ட்' வண்டிகள்

10 லட்சம் பவுன் மதிப்புள்ளவை

சென்னையைச் சேர்ந்த மோட்டார் நிறுவனமொன்று 100 லேலண்ட்-காமட் மோட்டார்களை பிரிட்டனிலிருந்து வாங்க நிச்சயித்திருக்கிறது. இதையும் சேர்த்து, நடைமுதல் நிதி ஆண்டில், இந்தியாவிலிருந்து சுமார் 10 லட்சம் பவுன்கள் மதிப்புள்ள மோட்டார்களுக்கு 'ஆர்டர்' கிடைத்திருக்கிறது.

டீசல் எண்ணெயில் ஓடும் இவை சிக்கனமாகயிருப்பதுடன், நீண்ட உழைப்பும் தரக்கூடியதாக இருக்கிறதாம். பிரயாண வண்டிகளைத் தவிர பாரவண்டிகளுக்கும் காமட் ரக மோட்டார்களை, இந்தியாவிலுள்ள பல நகரசபைகள் விரும்பி வாங்குகின்றனவாம்

பெர்கின்ஸ் நிறுவனத்தில் கோவை ஜி. டி. நாயுடு

கோவை தொழிலதிபர் தோழர் ஜி. டி. நாயுடு பிரிட்டனிலுள்ள பெர்கின்ஸ் நிறுவனத்தின் பயிற்சி நிலையத்தில் டீசல் எஞ்சினைப்பற்றி விசேட ஆராய்ச்சி செய்து வருகிறார்.

பெர்கின்ஸ் நிறுவனம் தயாரிக்கும் டீசல் எஞ்சின்கள் உலகப் பிரசித்தி பெற்றவை.

இந்தியாவிலேயே முதல் முதலாக பெர்கின்ஸ் என்ஜினை இறக்குமதி செய்தவர் தோழர் ஜி. டி. நாயுடு அவர்கள்தான்—1934-ல், பெர்கின்ஸ் எஞ்சின் இங்கு வந்தது.

சென்னையில் மேலும் இரு வைத்தியக்கல்லூரிகள்

மந்திரி ஷெட்டி அறிவிப்பு

காரைக்குடி, ஜுன் 22—சென்னை அரசாங்கம், மேலும் இரு வைத்தியக் கல்லூரிகளைத் திறக்க முடிவு செய்திருப்பதாக சுகாதார மந்திரி ஏ. பி. ஷெட்டி அறிவித்திருக்கிறார்.

காரைக்குடியில் வைத்தியக் கல்லூரி ஏற்பட வேண்டுமென டாக்டர் ஆர். எம். அழகப்பசெட்டியார் விரும்புவது பற்றிக் குறிப்பிட்டு, அதுபற்றி நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கையின்பேரில் சர்க்காரின் முடிவு சீக்கிரம் அறிவிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்.

எந்த இடத்தில் கல்லூரி துவங்குவது என்பது முடிவான பின்புதான் சர்க்கார் எவ்வளவு உதவி செய்ய முடியுமென்பதைக் கூற முடியும் என்றும் அவர் தெரிவித்தாராம்.

"வைத்தியக் கல்லூரி துவங்குவது பெரிய முயற்சி; கல்லூரியில் 50 மாணவர்களுக்கும், அதன் மருத்துவ மனையில் 450 படுக்கைகளுக்கும், கட்டிட வசதிகள் முதலியவற்றிற்கும் சுமார் ஒரு கோடி ரூபாய் செலவு ஆகும்; நிர்வாகச் செலவு ரூ. 50 லட்சம் ஆகும்," என்றும் ஷெட்டி தெரிவித்திருக்கிறார்.

தென்னாட்டில் தொழில் நுணுக்கப் பயிற்சி

இந்தியப் பேரரசு ஆலோசனை

சென்னை, ஆந்திரா, மைசூர், திரு-கொச்சி, குடகு ஆகிய மாநிலங்கள் கொண்ட 'தென் இந்தியா'விற்கு தனி நபர்களின் தொழிற்சாலைகட்கும், சர்க்கார் தொழிற்சாலைக்கும் தேவையான அளவு தொழில் நுட்பப் பயிற்சி அளிப்பதற்காக இந்தியப் பேரரசு, தொழில் பயிற்சிச்சாலைகளை அதிகரிப்பது பற்றி 'ஆலோசித்து' வருகிறதாம்!

விசாகையிலுள்ள இந்துஸ்தான் கப்பல் தொழிற்சாலை, பெங்களூரிலுள்ள 'பாரத் மின்சாரத்தொழிற்சாலை' ஆகியவற்றின் தொழிலாளர்கள் இந்தப் பயிற்சியை மேற்கொள்ள முன்வந்துள்ளனராம்.

சென்னையிலுள்ள இதுபோன்ற ஏழு பயிற்சிச்சாலைகள் உட்பட தென்னாட்டில் மொத்தம் 17-பயிற்சிச் சாலைகள் உள்ளன; இவ்வாண்டில் இந்தப் பயிற்சி நிலையங்களிலுள்ள மொத்தம் 1,000 இடங்களுக்கு 13,270 பேர் மனுச் செய்து கொண்டனர்; அவர்களில் 10,535 பேர் 'பேட்டி'க்கு அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களிலும் 6,675 பேர்தான் பேட்டியில் கலந்து கொண்டனர்.

அந்த 6,675 பேர்களிலும் 1,326 பேர் பயிற்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர்.

எஞ்சினீயரிங், கட்டிட வேலைகளுக்கான தொழில் நுணுக்கப் பயிற்சி இரண்டாண்டுகளுக்கு அளிக்கப்படும். இதில் 6 மாத காலத்திற்கு ஏதாவதொருதொழிற்சாலையில் பட்டரை வேலைச் சூழ்நிலையில் அவர்கள் வேலை செய்ய வேண்டியிருக்குமாம்.

சென்னை மாநிலத்தில் மட்டும் இந்த பயிற்சிக்காக மனுப் போட்ட 4,839 பேரில் 508 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

பொது அறிவுக் கல்வி

கல்லூரிகளில் அளிக்கத் திட்டம்

பல்கலைக் கழகங்களில் பொதுக் கல்வி பயிற்சி அளிப்பதற்கான திட்டமொன்றை ஸ்ரீநகரில் நடைபெற்ற துணைவேந்தர்கள் மாநாடு சிபாரிசு செய்திருக்கிறது. பல்வேறு பல்கலைக் கழகங்களின் பரிசீலனைக்கு அது அனுப்பி வைக்கப்படும்.

அதன்படி, விஞ்ஞானத்தையோ அல்லது இலக்கியத்தையோ பிரதான பாடமாகப் படிக்கும் மாணவர்கள் மற்ற பாடங்கள் கூறும் பொது அறிவு பெறச் செய்வதுதான் அந்த திட்டத்தின் நோக்கமெனத் தெரிகிறது. இந்தப் பாடங்களுக்குப் பரீட்சை நடத்த வேண்டியதில்லையாம்.

புகளூரில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன்

பொதுக் கூட்டத்தில் மாநாட்டு நிதியளிப்பு

20—6—55 அன்று மாலை வேலாயுதம்பாளையத்தில், (புகளூர்) பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கு வரவேற்பு அளிக்கவும், மாநில மாநாட்டு நிதியளிக்கவும் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

புகளூர்—வேலூர் காவிரிப் பாலத்தினின்று பொதுச் செயலாளர் அவர்கள் திறந்த காரில் வாழ்த்து ஒலிகளுடன், இன்னிசைக் கருவிகள் முழங்க, ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான வெற்றிலைத் தொழிலாளர்களும், புகளூர் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களும் கழகக் கொடிகளுடன் கலந்து கொண்டனர்.

மாலை நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு தோழர் க. பெரியசாமி தலைமை வகித்தார். தோழர்கள் வை. இரத்தினவேலு, அன்பில் கர்மலிக்கம் ஆகியோர் பேசியபின், பொதுச் செயலாளருக்குப் பல கிளைக்கழகங்கள், மன்றங்கள், தொழிலாளர் சங்கங்கள் ஆகியவை சார்பில் மலர்மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டதுடன், வெண்பொற்காசுகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. வரவேற்பிதழ்களும் வாசித்தளிக்கப்பட்டன.

பின்னர், வேலாயுதம்பாளையம் கிளைக் கழகச் சார்பில் பொதுச் செயலாளரிடம் மாநில மாநாட்டு நிதிக்காக ரூ. 100 வழங்கப்பட்டது. இதற்கு முன் திருச்சி மாவட்டக் கழகத்திடம் ரூ 100 கொடுக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் வேலாயுதம் பாளையம் கிளைக் கழகச் சார்பில் மாநாட்டு நிதிப் பங்காக ரூ. 200 கொடுக்கப்பட்டுள்ளது.

வரவேற்புகளையும், நிதியையும் பெற்றுக்கொண்டு பொதுச் செயலாளர் அவர்கள் நன்றி தெரிவித்தும், கழக ஆக்கவேலை குறித்தும் நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்.

வேலாயுதம்பாளையம், புகளூர், தோட்டக்குறிச்சி, தவுட்டுப்பாளையம், பொத்தனூர், கரூர், செவந்திப்பாளையம், மரவாபாளையம், குளக்காட்டுப்புதூர், முதலைப்பட்டி, பாண்டமங்கலம், கொடுமுடி, திருச்செங்கோடு, வேலூர் ஆகிய கிளைக் கழகங்கள் சார்பிலும், தோட்டக்குறிச்சி தமிழன் சைக்கிள் மார்ட், தோட்டக்குறிச்சி ஊராண்மைக் கழகத் துணைத் தலைவர் போன்ற தனிப்பட்டோர் சார்பிலும், வேலாயுதம்பாளையம் தொழிலாளர் சங்கம், பொத்தனூர் வெற்றிலைத் தொழிலாளர் சங்கம், புகளூர் சர்க்கரை ஆலைத் தொழிலாளர் சங்கம், கன்னியூர் பகுத்தறிவு மன்றம், வேலாயுதம்பாளையம் மறுமலர்ச்சி மன்றம், குன்னிப்பாளையம் கண்ணீர்த்துளி நாடக மன்றம், வேலூர் அண்ணா மன்றம், வேலூர் வ. உ. சி. மன்றம் ஆகிய சங்கங்கள், மன்றங்கள் சார்பில் பொதுச் செயலாளர் அவர்கட்கு மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

சென்னை தமிழாசிரியர் கழகம்

19—6—55ல், தொண்டைமண்டலம் உயர்நிலைப் பள்ளியில் சென்னை தமிழாசிரியர் கழகம் கூடியது. டாக்டர் அ. சிதம்பரநாதரும், மயிலை சிவமுத்து அவர்களும் தலைமை வகித்தனர். கூட்டத்தில், இவ்வாண்டு தமிழாசிரியர் மாநில மாநாட்டினை தஞ்சையில் நடத்துவதென்றும், தாலுகாவாரியாக கழகங்கள் அமைத்து, பிறகு மாவட்டத்திற்கென குழு அமைத்துக்கொண்டு தமிழாசிரியர் கழகத்தை வலுப்படுத்த வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

பின்னர், மயிலை சிவமுத்து, ஆலாலசுந்தரனார், டாக்டர் துரையரங்கனார், அன்பு கணபதி, வில்லவபதி, சண்முகனார், கிருஷ்ணராமானுஜம், அம்பை சங்கரன், செல்வராஜ் ஆகிய ஒன்பதின்மர்கொண்ட குழு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. இக்குழுவினர்க்குத் தமிழாசிரியர் கழகத்தைப் பதிவு செய்யவேண்டிய சட்டதிட்டங்களை ஆராய்ந்து முடிவு செய்யவும் மேலும் ஆவன புரியவும் அதிகாரம் அளித்தும் மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தூத்துக்குடி மக்கள் மறுமலர்ச்சி மன்றம்

19—6—55 காலை 11 மணிக்கு மன்றக் கட்டிடத்தில் நடைபெற்ற நிர்வாக உறுப்பினர் கூட்டத்தில், நகரில், முகமது சாதலிபுரம் தெருவிலுள்ள முனிசிபல் பிரசவ ஆஸ்பத்திரியில் பொதுமக்கள் வசதிக்காக ஆயாக்களை அதிகப்படுத்தும்படி நகர சபையினரையும், எஸ். எஸ். பிள்ளை தெருவும், யாதவர் தெருவும் சந்திக்குமிடத்தில், ஒரு மெர்குரி லைட் போட்டு போக்கு வரத்துக்குப் போதிய வசதி செய்து தரும்படி அதிகாரிகளையும், பக்கீர் ஓடை பாலத்தில் செயின் ஜான் தெருவுக்கு இறங்கும் பாதையில் படிக்கட்டுகள் அதிக உயரமாகக் கட்டப்பட்டு, பெண்களும், குழந்தைகளும் போக வர இயலாதிருப்பதைக் கவனித்து ஆவன செய்ய நகர சபையினரையும் கேட்டுக்கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தெ. இ. இரயில்வே தொழிலாளர் சங்கம்

22—6—55ல், செங்கல்பட்டு கிளையின் நிர்வாகக் குழு திரு. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர் எஸ். சண்முகசுந்தரம் இயற்கை எய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. பின், 27—6—55ல், 'கோரிக்கை தினம்' கொண்டாடுவது பற்றி வலியுறுத்தப்பட்டது.

தங்கராசு நினைவு கைப்பந்து ஆட்ட விழா

21—6—55ல், சோழவந்தானில் மூவர் கைப் பந்தாட்டப் போட்டி விழா திரு ஏ. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. பிரமுகர்கள் பலர் பேசினர்; இறுதியில், திரு. எம். ராமசாமி வெற்றி பெற்ற தங்கராசு குழுவினருக்கும், வத்தலக்குண்டு குழுவினருக்கும் பரிசுகள் வழங்கினர்.

விருந்தும்—பாராட்டும்

பெண்ணாடம் கழக உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய திரு. ப. கோவிந்தசாமி அவர்கள் பெண்ணாடத்தை விட்டு திருக்கோவிலூருக்கு மாற்றப்படுவதையொட்டி தேநீர் விருந்தொன்று அளிக்கப்பட்டது.

திரு. க. முத்துகுமாரசாமி தலைமையில் சிவ. சிதம்பரம் மன்றத்தில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் திரு. க. பெரியண்ணன், சிவ. பழமலை, பி. சோ. வேலாயுதனார், மற்றும் பலரும் அவரைப் பாராட்டிப் பேசினர்.

திரு. கோவிந்தசாமி தமக்கு அளிக்கப்பட்ட விருந்துக்கும்—பாராட்டுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

குறைந்த ஊதியம் பெறும் சர்க்கார் ஊழியர்

வாழ்க்கைத் தரம் உயர அதிகாரிகள் காட்டும் 'வழி?'

இந்தியப் பேரரசு, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக ஏதேதோ திட்டங்கள் தீட்டுவதாயும், அந்தத் திட்டங்களைத் தீட்டுவதற்கென்றே ரஷ்யாவிலிருந்தெல்லாம்கூட நிபுணர்களை அழைத்திருப்பதாயும், தீட்டப்பட்டுள்ள பல்லாயிரம் கோடி ரூபாய் பெறுமான திட்டங்கள் திருப்திகரமாக நிறைவேறிவிட்டால் மக்களின் வாழ்க்கைத்தரம் இப்போதிருப்பதைப்போன்று இரண்டு மடங்காகிவிடும் என்றும் பேசிக்கொள்கிறார்கள்.

ஆனால் கிடைக்கும் ஊதியம் போதாமல் தவிக்கும் ஏழை சர்க்கார் ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த திருச்சி மாவட்ட நிர்வாக போலீஸ் அதிகாரிகள் செய்துள்ள சேவை எத்தனை மகத்தானது என்று பாருங்களேன்.

திருச்சி மாவட்ட 'கலெக்டர்' ஆர். எஸ். மலையப்பன் என்பவர், ஆறு 'சர்க்கா'க்கள் வாங்கியுள்ளாராம்; அலுவலகத்தில் வேலை இல்லாதிருக்கும்போது, அலுவலக வேலைக்காரர்கள் அந்த 'சர்க்கா'வில் நூல் நூற்பார்களாம்; அப்படி நூற்கும் நூலை துணியாக மாற்றி, நூல் நூற்றவருக்கே திருப்பித் தந்துவிடுகிறார்களாம்.

இதற்கு ஒரு மாதம் முன்பாகவே திருச்சி மாவட்ட போலீஸ் அதிகாரியான கே. விசுவநாதன் நாயர் என்பவர், தம் கீழ் உள்ள ஆயுதந் தரித்த போலீசாரில் 15 பேர்களை நூற்புப் பயிற்சியில் ஈடுபடுத்தியிருக்கிறாராம்.

'அந்தப் போலீசாரும், அவரது குடும்பத்தினரும், வேலை எதுமற்றிருக்கும்போது நூற்கவேண்டும்,' என்பது விதியாம்.

இதனால், போதுமான ஊதியமின்றிக் கஷ்டப்படும் இந்த சர்க்கார் ஊழியருக்கு மாதம் ரூ 10 முதல் ரூ. 15 வரை அதிக வருவாய் கிடைக்கிறது என்று அந்த அதிகாரிகள் கூறியிருக்கின்றனராம். மேலும் ஊழியர்களின் சோம்பல் தன்மையையும் அது போக்குமாம்.

எப்படி வாழ்க்கைத்தரம் உயர அதிகாரிகள் காட்டியுள்ள வழி?

காஷ்மீர் தகராறு-பாக். பிரதமர் துடிப்பு

காஷ்மீர் தகராறுக்கு உடனடியாக முடிவு காண வேண்டும் என்றும், தவறுயானல் விவகாரம் மீண்டும் ஐ. நா. சபைக்கு எடுத்துச் செல்லப் படுமென்றும், முன்பு குறிப்பிட்டிருந்ததை பாகிஸ்தான் பிரதமர் உறுதி செய்திருக்கிறார்.

"இப்பிரச்சினையை விரைவில் தீர்க்க வேண்டும்; இனியும் பாகிஸ்தானல் காத்திருக்க முடியாது," என்றும் அவர் தெரிவித்திருக்கிறாராம்.

வரவேற்கிறார்!

நேரு-புல்கானின் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையை வரவேற்பதாகவும், 'உலக அமைதியில் உண்மையான ஆர்வத்திற்கு இது ஒரு அடையாளம்' என்றும் பாக். பிரதமர் கூறியிருக்கிறார்.

கூட்டு சர்க்கார்?

கிழக்குப் பாகிஸ்தானின் ஐக்கிய முன்னணிக் கட்சியுடன் தாம் கூட்டாக ஒரு புதிய சர்க்கார் அமைக்கப்போவதாக பிரதமர் முகம்மது அலி தெரிவித்திருக்கிறார்.

சீனு செல்வார்:

செஞ்சீனுவுக்கு வரும்படி சூ-யென்-லாய் அனுப்பியிருந்த அழைப்பை தாம் ஏற்றுக்கொண்டிருப்பதாயும், இந்த ஆண்டு இறுதியில் தாம் அங்கு செல்ல எண்ணியுள்ளதாயும் பாக். பிரதமர் முகம்மது அலி தெரிவித்திருக்கிறார். மேலும் தாம் சீனு சென்று திரும்பியதும், சீனப் பிரதமர் பாகிஸ்தான் வர இணங்கியிருப்பதாகவும் அவர் தகவல் தந்திருக்கிறார்.

பரந்த நோக்கம்?

வருகிற ஜூலை திங்கள் 7-ந் தேதியன்று தில்லையில் நடைபெற இருக்கும் 'நடராஜா கும்பாபிஷேகத்'தின்போது 50,000 பேருக்கு 'சாம்பார் சாதம்' கொடுக்கப்படுமாம்!

ஏடன் காலனியில் பழங்குடி மக்கள் கொதிப்பு!

அவர்களை அடக்க பிரிட்டிஷ் இராணுவம் விரைகிறது

ஏடன் காலனியின் கிழக்குப் பகுதியில் வாழும் அராபிய பழங்குடி மக்கள், தங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக சுமார் 90 துருப்புகளைச் சுற்றி வளைத்துக் கொண்டனராம்.

அந்தப் பகுதியில் சாமான் போக்குவரத்து செய்வதற்கு அந்தக் குடிமக்கள் கொண்டாடும் ஏகபோக உரிமையை பிரிட்டன் ஏற்கவில்லையாம்; அதற்காக, தங்கள் போக்குவரத்துக்குப் பாதுகாப்பாக இராணுவத்தை அனுப்பி வைத்திருக்கின்றனர்.

பழங்குடி மக்களின் தலைவர், அந்தப் பகுதியில் வரும் போக்குவரத்தைத் தடுத்திருக்கிறார்; இராணுவத்தினர், அவர்களை விரட்டச் சென்றபோது, பழங்குடி மக்களால் சூழப்பட்டு, 'கைதி'களாயினராம்.

இராணுவத்தினரை 'விடுவிக்க பிரிட்டிஷ் விமானப் படையின் பிரிவினர் சென்றுள்ளனராம்.

இதற்கு முன்பாக அங்கு இரு சாராரிடையேயும் தோன்றிய கலவரத்தின் விளைவாக இரண்டு பிரிட்டிஷ் அதிகாரிகளும், எட்டு பழங்குடி மக்களும் கொல்லப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது

தமிழில் கலைச் சொற்கள்

கருத்துரை வழங்க நிபுணர் குழு நியமனம்

வட்டார மொழியில் கலைச் சொற்களை உபயோகிப்பதற்கான கொள்கை குறித்து சர்க்காருக்கு கருத்துரை வழங்குவதற்கு டாக்டர் ஏ. லட்சுமணசுவாமி தலைமையில் நிபுணர்கள் குழு ஒன்றை சென்னை சர்க்கார் நியமித்துள்ளது.

3 திங்களுக்குள் அரசாங்கத்திற்கு சிபாரிசுகளைச் செய்யுமாறு இந்தக் குழு கேட்டுக் கொள்ளப்படும்.

கல்மண்டபம் தி. மு. க. திறப்பு விழா

புதுவை வட்டத்தைச் சேர்ந்த கல்மண்டபம் கிராமத்திலுள்ள தி. மு. கழகத் திறப்பு விழா, 28—6—55 மாலை 5-30 மணிக்கு, தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறும். தோழர் இரா. சாம்பசிவம் கொடியேற்றிவைப்பார். தோழர் சி. பி. சிற்றரசு கழகத்தைத் திறந்து வைப்பார். தோழர்கள் வாணிதாசன், கோ. சாமிநாதன் ஆகியோர் பேசுவர்.

பொதுக்கூட்டம்

26—6—55 மாலை 5 மணிக்கு, இராசபாளையம், புதிய பஸ் நிலையத்திற்குக் கீழ்ப்புறமுள்ள திடலில், தி. மா. மு. கழகச் சார்பில் டாக்டர் சேதுராசு தலைமையில் நடைபெறும். தோழர் சி. பி. சிற்றரசு பேசுவார்.

சர்க்கார் போக்குவரத்து மத்ய ஒர்க்ஷாப் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

திறப்பு விழா—5-ம் ஆண்டு விழா

28—6—55 மாலை 4½ மணிக்கு, சென்னை குரோம்பேட்டையில் நடைபெறும். சங்கக் கட்டிடத்தை திரு. கே பி. கே. மேனன் திறந்து வைப்பார். ஆண்டு விழாவிற்கு திரு.ஆர்.எம்.சுந்தரம் தலைமை வகிப்பார். திரு. எஸ். சுந்தரேசனும், தொழிலாளர் சார்பில் திரு ஜி.எம். மதுரையாரும் வரவேற்புரையாற்றுவர். திரு. எம் கே சாமி ஆண்டறிக்கை வாசிப்பார்.

சென்னை 16-வது வட்டத் தோழர்களுக்கு ஓர் வேண்டுகோள்

சென்னை 16-வது வட்டாரத்தில் இதுவரை சிறந்ததொரு சங்கம் ஏதும் தோழர்களுக்காக இல்லாததினலும், பல தோழர்கள் மேற்படி சங்கம் ஒன்று நிறுவி கற்பணியாற்ற முனைந்திருப்பதினலும் சங்கம் ஒன்று ஏற்படுத்த, பல தோழர்களின் கூட்டம் ஒன்று, 26-6-55 மாலை 4 மணிக்கு, சென்னை, ஆனை கவுணி-டிரெவெலியன் பேசின் தெரு, 5/6-ம் எண்ணுள்ள கட்டிடத்தில் நடைபெறும். மேற்படி கூட்டத்திற்கு யாவரும் வந்திருந்து, ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் தருமாறு அவ்வட்டார மக்கள் வேண்டிக்கொள்கிறார்கள்.

மாநில மாநாட்டு நிதிக்கு 'வீர வாலி'—நாடகம்

இடைப்பாடி திருவள்ளுவர் கலா மன்றத்தாரால், தி. மு. கழக மாநில மாநாட்டு நிதிக்காக, 'வீர வாலி'—நாடகம் நாமக்கல் ஸ்டார் டாக்கீசில் நடைபெறும். நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

தி. மு. க. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

25—6—55: மாலை 4 மணி: சேவூர் ஊராட்சி மன்றத்தில் வரவேற்பு;
மாலை 5 மணி: ஆரணியில் ஊர்வலம்;
மாலை 6 மணி: ஆரணியில் தி.மு.க. பொதுக்கூட்டம்;
இரவு 8 மணி. சேவூர் தி. மு. க. பொதுக்கூட்டம்.
26—6—55: காலை 9-30 மணி: வேலூர் நகராட்சி மன்ற வரவேற்பு;
மாலை 2-30 மணி: வ. ஆ. மாவட்டக் கிளைக் கூட்டம்;
மாலை 6 மணி: வேலூர் தி. மு. க. பொதுக்கூட்டம்.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

ஜூன் 26: இராசபாளையம்
28: கல்மண்டபம் (புதுவை)
30: குற்றாலம் (திருமணம்)

திருச்சி மாவட்ட கிளைக் கழகச் செயலாளர்களுக்கு

"22—5—55ல் நடைபெற்ற நமது மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில், 15—6—55-ந் தேதிக்குள் கிளைக் கழகங்கள், தங்கள் மாநில மாநாட்டு நிதிப் பங்குத் தொகையை மாவட்டப் பொருளாளர் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி சில கழகங்கள்தான் இதுவரை பணம் அனுப்பிவைத்துள்ளன.

"19—6—55 அன்று நடைபெற்ற நிதியளிப்பு கூட்டத்தில் ரூ. 1,600 மட்டும் பொதுச் செயலாளரிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பாக்கித் தொகையை இன்னும் இரண்டு வாரகால அளவில் கொடுத்துவிடுவதாகவும் உறுதி கூறப்பட்டுள்ளது.

"ஆகவே இதுவரை அனுப்பிவைக்காத கிளைக் கழகங்கள், உடனடியாக தங்கள் பங்குத் தொகையை மாவட்டப் பொருளாளர் முகவரிக்கு அனுப்பிவைத்து வாக்குறுதியை வெற்றிபெறச் செய்ய வேண்டுகிறேன்,"

என்று, திருச்சி மாவட்ட தி. மு கழகச் செயலாளர் தோழர் ஏ. பி. தர்மலிங்கம் அறிவிக்கிறார்.

தேயிலைத் தோட்ட தொழிலாளர் வேலை நிறுத்தம்

தொடர்ந்து நடைபெறுகிறது

கல்கத்தா, ஜூன் 24—

டார்ஜீலிங் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்துவருகின்றனர்.

25 தோட்டங்களில் தொழிலாளர் ஒருவர்கூட வேலைக்கு வரவில்லை. நேற்று முன்தினம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் சிலர், வேலைக்குத் திரும்பியதாகவும் கூறப்பட்டது.

தாதுப் பொருள்கள் அபிவிருத்தி

இந்தியப் பேரரசு சுமார் 20 கோடி ரூபாய் செலவில், நாட்டில் உள்ள தாதுப் பொருள்களைத் தோண்டி எடுக்கவும், அபிவிருத்தி செய்யவுமாக திட்டமொன்று வகுத்திருப்பதாக, இயற்கை வள இலாகா மந்திரி கேசவதேவ் மாளவியா, ஒரு பேட்டியின் போது குறிப்பிட்டிருக்கிறார்.

தாழ்த்தப்பட்டவரை அவமதித்த தொழிலாளி

ரூ. 2 அபராதம் விதிக்கப்பட்டார்

பெங்களூர், ஜூன் 24—

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவருக்கு முகம் சிரைக்க மறுத்ததாக, ஒரு தொழிலாளிக்கு ரூ 2 அபராதம் விதித்து நகர நீதிபதி தீர்ப்பளித்திருக்கிறார்.

தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ், மைசூர் நீதிமன்றத்தில் வந்த வழக்கு இதுவே முதலாவது என்று கூறப்படுகிறது.

தி. மு. க. தோழர்கள்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

உடனேயே அதனைத் தடுத்து நிறுத்தி, தென்னாட்டின் வியாபாரத் துறையையே சீர்குலைக்கும் கொடிய நோக்குடன் வடநாட்டு சர்க்கார், 'குச்சிக் கிழங்கில் தயாரிக்கும் சவ்வரிசி உணவுக்குச் சிறந்ததில்லை' என்று கூறிவிட்டது.

"இங்கிருந்து ஆண்டொன்றுக்கு ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள வெற்றிலை பம்பாய்க்கும், நாகப்பூருக்கும், ஆமதாபாத்திற்கும் அனுப்பப்படுகிறது; ஆனால், அந்த வெற்றிலையை ஏற்றுமதி செய்து அனுப்பத் தென்னாட்டவருக்கு உரிமை இல்லை—ஐந்தாறு மார்வாரிகளிடம் அந்த உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இது நியாயந்தானா?—தென்னாட்டிற்கு இலாபந்தானா? அந்த ஐந்தாறு மார்வாரிகளும் இந்த வியாபாரத்தைக் கொண்டு தங்கள் வாழ்க்கையை சுகமாக நடத்துகிறார்கள். இந்த விதமாகத் தென்னாடு வடநாட்டால் சுரண்டப்பட்டு சீர்குலைக்கப்படுவது நேர்மைதானா?"

இவ்வாறு தென்னாட்டை சுரண்டும் வடநாட்டின் விபரீதப் போக்கினை விளக்கிவிட்டு, சென்னை சர்க்கார் பற்றிப் பேசுகையில், அண்மையில் சென்னை சர்க்கார் தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரச் சுவரொட்டி வெளியிட்டதையும், அதற்குப் பார்ப்பனர்களிடமிருந்து கிளம்பின எதிர்ப்பைக் கண்டு அதனை திரும்பப்பெற்றுக்கொண்ட சென்னை சர்க்காரின் போக்கையும் குறிப்பிட்டுவிட்டு, "சர்க்கார் வெளியிட்ட அந்தப் பிரச்சாரப் படமே இழிவைத் தருகிறது என்று நினைப்பவர்கள், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக நாயினும் கடையராக ஒதுக்கித்தள்ளப்பட்ட சேரிகளில்—குடிசைகளில் வாழ்ந்து வரும் மக்கள் எவ்வளவு மனவேதனை அடைவார்கள்என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?" என்று கேட்டார்.

திருமணங்கள்

25—6—55 காலை 10 மணிக்கு, சென்னை, பழைய வண்ணாரப் பேட்டை, மணிகண்ட முதலி தெரு, 3-வது சந்து, 2-ம் எண்ணுள்ள இல்லத்தில், தோழர் த. வெங்கடேசன்—தோழியர் இராணியம்மாள் திருமணம், தோழர் கே. கோவிந்தசாமி தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், டி. வி நாராயணசாமி, தோழியர் தேசியமணி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

27—6—55 காலை 9 மணிக்கு, பூவிருந்தவல்லி அடுத்த நசரதப் பேட்டை என வழங்கும் முத்துரங்கப்பேட்டை பாடசாலைத் தெரு கண்ணாயிரம் வீட்டில், தோழர் எம். கோதண்டபாணி—தோழியர் செயலட்சுமி திருமணம், தோழர் எம். வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சைதை சம்பந்தம், என். எம் வீரராகவன், பி. சின்னசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

கோவா விடுதலைப் போராட்டம்

பலன் தருமென நம்பிக்கை இல்லையாம்!

'ஆதரிக்கவில்லை' என்று காங்கிரஸ் பொதுச்செயலாளர் மாதவன் நாயர் தகவல்

'புது டில்லி, ஜூன் 24—

"இப்போதுள்ள சூழ்நிலையில் கோவா விடுதலைக்கு போராட்டம் நடத்துவது சரியல்ல," என்று அகில—இந்திய காங்கிரஸ் கருதுவதாக பொதுச் செயலாளர் மாதவன் நாயர் தெரிவித்திருக்கிறார்.

"போராட்டத்தைவிட அரசியல் பேச்சுவார்த்தைகள் மூலம், போர்த்துகீசியரை கோவாவை விட்டு வெளியேறச் செய்ய முடியும்; போராட்டம், நாம் விரும்பும் பலனைத் தரும் என்று காங்கிரஸ் நம்பவில்லை,"

என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

கோவா, இந்தியாவின் பகுதி என காங்கிரஸ் கருதுவதாயும், அங்கு நடைபெறும் போராட்டத்திற்கு அனுதாபம் தெரிவித்தாலும் ஆதரிக்கத் தயாராயில்லை என்றும், கோவா விடுதலைக்காக போராட்டம் தவிர இதர எல்லா நடவடிக்கைகளையும் காங்கிரஸ் எடுத்து வருகிறது என்றும் மாதவன் நாயர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆசிரியர்களின் ஊதியம் உயர்த்தப்படுமாம்!

ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்துவதற்காக நாட்டில் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களுக்கு மொத்தம் ரூ 6 லட்சம் மானியத் தொகையாக அளிப்பதென்று, ஸ்ரீநகரில் நடைபெற்ற மானியக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.